# வருடத்தின்நாள்தோறும்அவுஸ்திரேலியாவின்எல்லைகள் பாதுகாக்கப்படுகின்றன.

15.12.17

இந்த விடுமுறைக் காலத்தில் அநேக அவுஸ்திரேலியர்கள் ஓய்வெடுத்து, இளைப்பாறும் வேளையில் எமது எல்லைப்பாதுகாப்பு அதிகாரிகள், அவுஸ்திரேலியாவின் எல்லைகளை அவதானித்துக்கொண்டும், சட்டவிரோதமாக நாட்டினுள் நுழைவதற்கான எந்தவொரு எத்தனிப்பையும் தடுத்துக்கொண்டும் கடமையில் உறுதியாக இருப்பார்கள். இந்த விடுமுறைக் காலத்தில் ஆட்கடத்தும் படகுகளை நிறுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவுஸ்திரேலிய எல்லைகளின் இறைமைக்கான தலைமைக்கட்டளை அதிகாரி, வான்படை உப தளபதி (Commander of Australia's Operation Sovereign Borders, Air Vice-Marshal ) Stephen Osborne ஐக் கேட்டோம்.

"அவுஸ்திரேலியாவின் எல்லைகள், வருடத்தின் ஒவ்வொரு நாளும் கண்காணிக்கப்படுகின்றன, உரோந்துசெய்யப்படுகின்றன மற்றும் பாதுகாக்கப்படுகின்றன," என்று வான்படை உப தளபதி Vice-Marshal Osborne கூறினார்

"நாம் எப்பொழுதும் அவதானித்துக்கொண்டிருக்கிறோம் அத்துடன் படகுமூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவை வந்தடைய எத்தனிக்கும் எவரையும் வழிமறித்துத் திருப்பி அனுப்புவதற்கு நாம் எப்போதும் தயாராகவுள்ளோம்.

"படகு மூலம் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவை எவரேனும் ஒருவர் ஒருவிதமாக வந்துசேர்ந்து வருடக்கணக்காகியும், அதற்காக முயற்சிப்பது பயனளிக்குமெனத் துரதிட்டமாக இன்னமும் சிலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்."

பொது விடுமுறைகளில் அவுஸ்திரேலிய எல்லைகளின் பாதுகாப்பில் ஏதேனும் குறைவு ஏற்படுகிறதாவெனக் கேட்டதற்கு, பிடிவாதமாக "இல்லை" என்றார் வான்படை உப தளபதி (Air Vice-Marshal ) Osborne அவர்கள்.

" பொது விடுமுறை நாட்களில் எமது எல்லைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படுவதில்லையென எவராவது நினைப்பது தவறாகும். படகுமூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குவர எத்தனிக்கும் ஒருவர்- எப்போது எத்தனிக்கிறாரென்பதைப் பொருட்படுத்தாது - மறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவார்."

வெளிநாடுகளிலுள்ள மக்கள் ஆட்கடத்தும் படகுகளில் தமது உயிர்களைப் பணயம் வைக்காமல் தடுப்பதில் அவுஸ்திரேலியாவிலுள்ள சமூகங்கள் ஆற்றக்கூடிய முக்கிய பங்குண்டென வான்படை உப தளபதி Air Vice-Marshal Osborne கூறினார்.

"அவுஸ்திரேலியாவிலுள்ள மக்கள் ஏனைய நாடுகளிலுள்ள தமது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் தீர்மானங்களில் செல்வாக்கைச் செலுத்த முடியும் அத்துடன்

செல்வாக்கைச் செலுத்துகிறார்கள்தான் என்பதையும் நாம் அறிவோம்," என்றார் அவர். "படகுமூலம் சட்டவிரோதமாக இன்னமும் அவுஸ்திரேலியாவுக்கு வரமுடியுமென வெளிநாட்டிலுள்ள உறவினருக்கு அல்லது நண்பருக்கு இங்குள்ள யாராவது ஒருவர் கூறுவாராயின், அவரது உறவினரின் அல்லது நண்பரின் பணத்தை இழக்கும் அபாயம் அல்லது உயிரையும்கூட இழக்கும் அபாயத்தில் விடுகிறார்கள்.

"அவுஸ்திரேலிய விசா ஒன்றுடன் வருவது மட்டும்தான் அவுஸ்திரேலியாவுக்கு வருவதற்கான ஒரே வழியென வெளிநாடுகளிலுள்ள நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் ஆலோசனை வழங்குவதன் மூலம் சரியான செயலைச் செய்யுமாறு அவுஸ்திரேலியாவிலுள்ள மக்களை ஊக்குவிக்க நான் விரும்புகிறேன்."

தவறான வழியில் வர முயற்சிக்கும் மக்கள் பிரயோசனமின்றித் தமது உயிரைப் பணயம் வைப்பதுடன் பணத்தை வீண்விரயம் செய்கிறார்களென வான்படை உப தளபதி (Air Vice-Marshal) Osborne வலியுறுத்தி முடித்துக்கொண்டார். அவர்கள் ஒருபோதும் அவுஸ்திரேலியாவில் குடியேற முடியாது.